**லுனுகல பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 27 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு லுனுகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த நிழற்பிரதி இயந்திரத்தின் பெறுமதியாகிய ரூபா 198,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 3,232,281 தொகை பெறுமதியான கப் வண்டி இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நன்கொடையாகக் கிடைத்திருந்த 440 கல்வணய்ஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதியாகிய ரூபா 487,142 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 81,325 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 140,595 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,836,638 கூட்டுத்தொகைக்கான 02 நடைமுறை கணக்குகளின் மற்றும் சேமிப்புக் கணக்கு ஒன்றின் மீதிகள் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) உள்ளூராட்சி ஊழியர்களின் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்தியிருந்த ரூபா 275,000 தொகையினை தொங்கல் கணக்கில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 345,918 தொகை பெறுமதியான 07 செலவுகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பட்டோலைகள், கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 270,214 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

1.3.3 தொங்கல் கணக்குகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 614,437 தொகைக்கான செலவு மீதியொன்று காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,303,040 தொகையாகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,710,561 ஆக இருந்தது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 5,317,618 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள், விரிவான பட்டோலைகள் மற்றும் நிலுவை வருமானப் பதிவேடுகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு இயலாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 132(ஓ) மற்றும் (ஔ) பிரிவுகள் | மாகாண சபை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்துடன் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களுக்காக சபை 8 சந்தர்ப்பங்களில் ரூபா 98,359 தொகை அமைச்சரின் அங்கீகாரம் இன்றி செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 158,159 பிரிவுகள் | முன்னைய ஆண்டின் நிலுவை வருமானம் ரூபா 1,652,958 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 2,289,301 தொகை என்பவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | மீளாய்வாண்டின் போது 6 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 78,000 தொகைக்கான முற்பணம் 2016 செப்டம்பர் 30 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,373,220 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 746,535 தொகை ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------------

2.2.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றல்

--------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் 2.6 சதவீதம் முதல் 76 சதவீதம் வரை முன்னேறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் 30 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை பலவீன நிலையில் காணப்பட்டது.

(இ) 2011 முதல் 2015 வரையான காலம் தொடர்பாக சபைக்குச் சொந்தமான 08 குத்தகை ஆதனங்களை வருடாந்தம் குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,868,193 இற்கான குத்தகை ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் மடொல்சிம நகரத்தில் காணப்படும் 21 கடைகளுக்காக 2005 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவீடு செய்யப்பட்டுக் காணப்படுகின்றது.

(உ) 1987 இன் 15 ஆம் இலக்கம் பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 15 ஆதனங்கள் தொடர்பாக 04 காலாண்டுகளை மிகைத்திருந்த நிலுவை ஏக்கர் வரி ரூபா 57,995 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஊ) சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் 11 கைத்தொழில் நிலையங்கள் தொடர்பாக 1980 இன் 47, 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 இலக்கங்களைக் கொண்ட சட்டங்கள் மற்றும் 1159/22 ஆம் இலக்கம் மற்றும் 2000 நவம்பர் 22 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

(அ) 2015 ஆண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 78,000 கூட்டுத்தொகைக்கான துணைக் கட்டுநிதிகள் முற்பணப் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், தீர்த்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கைடிரக்டர் வண்டியை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நடைமுறைக் கணக்கில் 2013 பெப்ரவரி முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 1,072,369 தொகை செலவு மீதி ஒன்று தொடர்ச்சியாக காணப்பட்ட போதிலும் 03 வருட காலமாக முதலீடு ஒன்றிலேனும் ஈடுபடுத்தாமல் நடைமுறைக் கணக்கு ஒன்றில் இந்த பணத்தை தடுத்து வைத்திருந்த காரணத்தினால் அப் பணம் விளைவற்றுக் காணப்பட்டது.

3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

---

சபைக்குக் கிடைத்திருந்த 440 கல்வணய்ஸ் கொடிக்கம்பங்களில் ரூபா 194,857 பெறுமதியான 176 கொடிக் கம்பங்களின் பற்றாக்குறை ஒன்று 2016 ஆகஸ்ட் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---

2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தில் 4.2 இன் பிரகாரம் எல்லா நிறுவனங்களும் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்து பயன்படுத்த வேண்டும். எனினும் சபை நடைமுறை ஆண்டில் அவ்வாறு செய்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------

2015 ஆண்டிற்காக போதியளவிலான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

----------------------------------------------------------------------------------

(அ) 2014 செப்டம்பர் 09 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 99,590 பெறுமதியான 69 கூரைத் தகடுகளில் 60 விளைவற்று சபை வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 11,500 இற்கான 1000 லீட்டர் நீர் தொட்டி ஒன்று மற்றும் ரூபா 47,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த 2000 லீட்டர் 02 நீர்த் தொட்டிகள் 2016 ஆகஸ்ட் 16 திகதி அளவில் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற நிலையில் சபை வளவில் காணப்பட்டது.

(இ) 2014 ஆகஸ்ட் மாதத்தில் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகையில் 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 992,200 இற்கான தொகை செலவிடப்பட்டு நீர் குழாய்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 18 திகதி வரை அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் அந்த நீர்க் குழாய்கள் உபகரணங்கள் விளைவற்ற நிலையில் சபை வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு